துறைக்காக ஒரு பி.ஏ. போடுவதுபற்றி செயற்குறிப்பு அரசாங்கத்திடம் ஏதேனும் இருக்கிறதா? அப்படியானுல் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறைக்கு, கலெக்டருக்கு இப்பொழுது உதவியாளர் நியமனம் செய்யப்பட்டிருக்கிருர். ஆனுல், விசாரணை செய்வது, குற்றங்களைக் கண்டுபிடிப்பது இவைகளெல்லாம் கலெக்டர் செய்ய முடியாத காரியம். போலீஸ் இலாகாவே இவைகளை இன்னும் திறம்படச் செய்ய முடியும். அதற்காக தனி அலுவலர்கள் நியமிப்பது அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது.

Co-operation Department

*134 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether it is a fact the Government is contemplating to split the C.-operative Department into three sections to cope up with the increased volume of work; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: (அ) இல்லை.

(இ) இவ்வினு எழவில்லை.

திரு. கே. விநயகம்: இது மாதிரி அதிகமாக வேலை வந்ததினுல் டிபார்ட்மெண்டை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்போகிருேம் என்று தங்களுடைய அமைச்சர் அவையிலேயிருந்து அறிக்கை பத்திரிகையில் வந்தது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: இவை தனி இலாகாக்களாக செயல்படுவதாகவும் எண்ணம் இல்லை, பிரிவுகளாகவும் செயல்படுவதாகவும் எண்ணமில்லை. நான் கூறுவது வேறு. அதாவது கிரெடிட் பார்ப்பதற்கு, கடன் கொடுக்கிற சங்கங்கள், வங்கிகள் இவை வளர்ச்சி அடையச் செய்வதற்கு, அவைகளைக் கண்காணிப்பதற்கு, தனி அலுவலர்களை மேல் மட்டத்திலிருந்து கீழ் வரையில் நியமிப்பது என்பதுதான். தனிப் பிரிவாகவோ, அல்லது தனி இலாக்காவாகவோ இருக்காது. இலாகாவிற்கு ஒரு தலைமை என்ற முறையில் பதிவாளர் இருக்கிருர்கள்.

திரு. கே. விநயகம்: தாங்கள் நிருபர்களுக்குக் கொடுத்த அறிக்கையிலே இருந்துதான் இந்தக் கேள்வியைத் தயார் செய்தேன். அதில் சொல்லப்பட்டிருப்பது இந்த டிபார்ட்மெண்டில் அதிகமாக வேலை வந்ததினுல், தனித்தனியாக மூன்று பிரிவுகள், கிரெடிட் சொஸைடி, பங்ஷனல் சொஸைடி, அக்ரிகல்சரல் பாரம் சொஸைடி இப்படி மூன்று பிரிவுகளாக பிரித்து, ஒரே இயக்குனர் இருக்க வேண்டும். ஆனுல் கீழே ஜாயிண்டு டைரக்டர்ஸ் என்றெல்லாம் போடுகிறேன் என்று தாங்கள் அறிக்கை விட்டது உண்மைதானு?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: தலைவர் அவர்களே, அந்த அறிக்கையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்ருக துருவிப் பார்த்தார்களானுல் அவர்களுக்குத் தெரியும். வேலை அதிகம்.

ஆனுல் தனி இலாகாவாக இருக்கவேண்டும். பிரிவினே செய்யவேண்டுமென்ற எண்ணமில்லே, நாங்கள் பிரிவினேக்கு உடந்தையாக இல்லே (சிரிப்பு). தனியாக கிரெடிட் பார்ப்பதற்கென்று மேல்மட்டத்திலிருந்து கீழ்வரையில் அதிகாரிகள் நியமிக்கப்பட்டு தனியாக கவனத்தைச் செலுத்துகிருர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விஞக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை, உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்].

2. ஒற்றிவைப்புத் தீர்மானம்.

அரிசன மாணவர்கள் கைது செய்யப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. கே. கோதண்டராமன் அவர்களும், திரு. எம். முத்தையா அவர்களும் நேற்று சென்னேயில் பல்வேறு கல்லூரிகளேச் சேர்ந்த அரிசன மாணவர்கள் தங்களுடைய பல்வேறு குறைகளேத் தெரிவிப்பதற்காக அமைச்சரிடம் வந்தபோது, அவர்கள் கைது செய்யப்பட்ட நிகழ்ச்சியைப்பற்றி விவாதிப்பதற்காக ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிருர்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன்: ஸார், நேற்றைய தினம் அரிசன மாணவர்கள் அவர்களுடைய பல்வேறு குறைகளேத் தெரிவிப்பதற்காக வேண்டி அமைச்சர் அவர்களே நேரிடையாக அணுகிக் கேட்டு தீர்த்துக் கொள்வதற்காக வேண்டி வந்தார்கள். அவைகளில் பிரதானமானது, இன்றைய தினம் ஹாஸ்டல்களில் தங்கி படிக்கும் மாணவர்களுக்கு ரூ. 42 கொடுக்கப்படுகிறது, அது ரூ. 60-ஆக உயர்த்தப்பட்டு கொடுக்கப்பட வேண்டும் என்பதுதான். விலேவாசி இன்றைக்கு எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்பது எல்லோருக்கும் நன்ருகத் தெரிந்த விஷயம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது வேறு. இதுவரைக்கும் சொல்லுங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன்: விலேவாசி ஏற்றத்திற்குத் தக்கவாறு, இந்தத் தொகையை அவசியம் உயர்த்தித் தரவேண்டும் என்கின்ற அடிப்படையில் தான் அவர்களும் கேட்டிருக்கிருர்கள். அப்படி கேட்டு அவர்களுடைய உரிமைகளேப் பெறுவதற்காக வேண்டி வந்தார்கள். அவர்களே இரும்பு வாராவதிக்கு அப்பால் நிறுத்தி வைத்தது மட்டுமல்ல. அவர்கள் 158 பேர்களே கைது செய்து சிறையில் அடைத்திருக்கிருர்கள். ஆகவே, அவர்களே உடனடியாக விடுதலே செய்ய வேண்டுமென்பது மட்டுமல்ல. அவர்களுடைய பிரச்சினே உடனடியாக தீர்க்கப்பட வேண்டும் என்பதைப்பற்றி விவாதம் நடத்தவேண்டும் என்பதற்காக வேண்டி இந்த சபையின் பிற அலுவல்களே ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.